**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.மு.ச.ஸ்ரீநாத்.,B.A.,B.L.,(Hons.) L.L.M.,</u>

<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2025ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ஆம் நாள் வியாழக்கிழமை</u>

**<u>இ.ம.எண்.3/2025 இன் அ.வ.எண்.310/2023</u>**

1. மணிகண்டன்
2. ஜெயபால் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. சந்திரசேகரன்
2. கவிதா
3. சூர்யா .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 05.11.2025 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.கதிர்வேல் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் திரு.M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>ஆணையுரை</u>**

மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.837/3, 838, 832/A1 ஆகிய காலைகளுக்கு கட்டுப்பட்ட 4.99 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மனுச்சொத்தினை நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து மனுச்சொத்தினை பார்வையிட்டு அதன் தன்மைகள் குறித்தும், மற்றும் வட்ட நில அளவையாளர் உதவியுடன் மனுச்சொத்தினை அளவீடு செய்தும், அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம்

கட்டளை 26 விதி 9 பிரிவு 151ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2.1) மனுதாரர்கள் தரப்பில், இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவார். அசல் வழக்கானது இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டடுள்ளது. மனுச் சொத்தானது ஆதியில் மனுதாரரின் தகப்பனாரான ராமசாமி என்பவருக்கு 1978ம் வருடம் பதிவாகியுள்ள பாகசாசன பத்திரப்படியும், 1981 மற்றும் 1996ம் வருடம் பதிவாகியுள்ள பாகபாத்திய விடுதலை பத்திரப்படியும் பாத்தியப்பட்டு அவர் காலமானதற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான மனைவி துளசியம்மாள் மற்றும் மகள்கள் சரஸ்வதி, லீலாவதி, அம்சவேணி மகன்கள் மணிகண்டன், ஜெயபால் ஆகியோர்கள் மனுச்சொத்தை அடைந்து கூட்டாக வைத்து அனுபவித்து வந்து, பின்னிட்டு மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரிகள் மனுச்சொத்தில் அவர்களுக்குள்ள பங்கைப் பொருத்து ஒரு பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதி வைத்து ஆக மனுதாரரின் தந்தை ராமசாமிக்கு பாத்தியப்பட்ட முழுச்சொத்துக்களும் மனுதாரருக்கும், 2ம் மனுதாரருக்கும் சர்வ சுதந்திரமாக பாத்தியமாகியுள்ளது.

(2.2) மேற்படி மனுச்சொத்துக்களை அனுபவித்து வருவதில் எதிர்மனுதாரர்கள் கடந்த ஒரு 1 ½ வருட காலமாக அடையாளம் தெரியாத நபர்களை அழைத்து வந்து மனுச்சொத்தில் அத்துமீறி நுழைந்து, தகாத வார்த்தைகள் பேசி தொடர்ந்து இடையூறு செய்து வந்ததாகவும், மேலும் மனுச்சொத்தில் மனுதாரர்கள் தேங்காய் போடுவதை தடுத்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததாகவும், இது தொடர்பாக மனுதாரர்கள் ஆனைமலை காவல் நிலையத்தில் புகார் செய்தும், சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் இந்த அசல் வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்கு பின்னிட்டும்

மனுச்சொத்தில் எதிர்மனுதாரர்கள் அத்துமீறி நுழைந்து ஆயுதங்களைப் பயன்படுத்தி தகராறு செய்ததாகவும், அது தொடர்பாக ஆனைமலை காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அது நிலுவையில் இருப்பதாகவும், மேலும் மனுச்சொத்தை அளந்து அத்து காட்ட சார் ஆட்சியர் மக்கள் குறைதீர்க்கும் முகாமில் மனு எண்.223/2023–ன்படி மனுச்சொத்தை அளவீடு செய்ய மனு கொடுத்து அளவீடு செய்ததை இந்த எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்ளாமல் தகராறு செய்ததாகவும் எனவே அசல் வழக்கு தாக்கல் செய்து அம்மனு நிலுவையில் உள்ளபோதே எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து மனுதாரர்களுடன் பிரச்சனை செய்து வருவதாகவும், எனவே மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3)** எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**6)** இருதரப்பு கட்சிகளும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மனுதாரர் இவ்வழக்கில் பிரதிவாதி தனது சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என கோரியே நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ளார். வாதி தன் வழக்குரையில் பிரதிவாதி தன் சொத்துக்களை

ஆக்கிரமிக்க முற்பட்டதாகவே கட்சி செய்துள்ளார். வாதி தன் சொத்துக்களில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக கட்சி ஏதும் செய்யவில்லை. ஒருவர் தன் சுவாதீனத்தை காக்க நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கு தாக்கல் செய்யும்போது அவர் தன் எல்லைகளையும் சுவாதீனத்தையும் உறுதியாக கூறியே அப்பரிகாரத்தைக் கோர இயலும். எனவே நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியுள்ள இவ்வழக்கில் எல்லைகளை நிர்ணயிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது. மேலும் மனுதாரர் தான் ஏற்கனவே மனு சொத்துகளை அளந்துவிட்டதாக கட்சி செய்துள்ளார். வாதி தன் ஆவணங்கள் கொண்டே தன் சுவாதீனத்தை நிரூபிக்க வேண்டும். அவர் சாட்சியங்கள் சேகரிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது. எனவே மேற்படி பரிசீலனையிலிருந்து மனுச்சொத்தை அளக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் தேவையில்லை என இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனு தள்ளுபடிக்குரியது என இந்நீதிமன்றம் காண்கிறது.

முடிவில், இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 06ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/........(மு.ச.ஸ்ரீநாத்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

ஒம்/........(மு.ச.ஸ்ரீநாத்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**

இ.ம.எண்.3/2025 இன் அ.வ.எண்.310/2023

நாள் : 06.11.2025

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**பொள்ளாச்சி.**

---